# அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்

**(அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில்)**
**பெசன்ட் நகர், சென்னை– 90**
**போன் : 2446 6777, 2491 7777**

---

## செய்திக் குறிப்பு
## ஸ்ரீ மகா சுதர்சன ஜெயந்தி

வைணவத் தலங்கள் திவ்ய தேசங்கள், அபிமானத் தலங்கள், பிரார்த்தனைத் தலங்கள், அருட்தலங்கள் எனப் பாகுபடுத்தப்படுகின்றன.

சென்னை, பெசன்ட் நகரில் ஓடைமாநகர் பகுதியில் அமைந்துள்ளது ஸ்ரீ மகாலட்சுமி திருக்கோயிலாகும். சக்தி இல்லாமல் சிவன் இல்லை. ஜீவனாகிய மகாவிஷ்ணுவின் சக்தியாக விளங்கும் சக்தி சொரூபம் ஸ்ரீ மகாலட்சுமியாகும். மகாலட்சுமி தனித்து காட்சி தர முடியாது. அவள் தாய். அவள் அருளும்போது தந்தையுடன் சேர்ந்து அருள வேண்டும் என்பதனால், மூலஸ்தான கருவறையில் மகாலட்சுமியுடன் சேர்ந்து உறையும் மகாவிஷ்ணுவாக நலம் தரும் திருமணக் கோலத்தில் காட்சி தருகின்றனர்.

மகாவிஷ்ணு ஒவ்வொரு முறையும் அவதாரம் எடுக்கும்போதெல்லாம் அவருடன் சக்கரத்தாழ்வார் அவதாரம் எடுத்து வருவது வழக்கம்.

இராமாவதாரத்தில் பரதனாக அவதாரம் எடுத்து வந்தார்.

கிருஷ்ணாவதாரத்தில் சுதர்சனராக வந்து சிசு பாலனை வதம் செய்ய உதவினார்.

ஜயத்ரதனை மாய்ப்பதற்காகச் சூரியனை மறைத்து உதவியதும் ஸ்ரீ சுதர்சன ஆழ்வார் ஆகும்.

மக்களுக்கு அல்லல் தந்து வந்த மாலிகன் என்ற மன்னனைக் கண்ணன் சார்பாக அழித்ததும் ஸ்ரீ சுதர்சன ஆழ்வாரே ஆகும்.

விதி வசத்தால் முதலையால் கவ்வி இழுக்கப்பட்ட **'இந்திரத்யும்னன்'** எனும் மன்னனாகிய யானையை முதலையின் சிரத்தை அறுத்துக் காப்பாற்றியதும் சுதர்சன ஆழ்வார் ஆகும்.

திருமால் பக்தன் அம்பரீஷ மன்னனுக்கு துர்வாசர் சாபம் தரப் போக, அதனை நீக்க துர்வாசரை மிரட்டியதும் ஸ்ரீ சுதர்சன ஆழ்வாரே ஆகும். திருமாலின் கதை, கத்தி, வில், சங்கு ஆகியவற்றுடன் சக்கரம் பஞ்சாயுதங்களில் பிரதான இடம் பெறும். திருமாலின் சக்தியைப் பிரயோகிக்க சக்கரம் மட்டுமே அதிக அளவில் பயன்படுத்தப்பட்டதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.

எல்லா படைக்கலன்களையும் பயன்படுத்தும் போது, தீயவர்களை அழித்து நல்லவர்களைப் காப்பதுதான் நோக்கமாக இருக்கின்றது என்றாலும், மிக வேகமாகவும், சாதுர்யமாகவும் பயன்படுத்தப்படும் ஓர் ஆயுதமாக ஸ்ரீ சுதர்சன சக்கரம் காட்டப்படுகிறது.

திருமாலின் சக்தி வடிவம் மகாலட்சுமி என்றாலும், மகாவிஷ்ணுவின் அந்த சக்தியைப் பிரயோகம் செய்யப் பயன்படுத்திய ஆயுதம் **ஸ்ரீ சுதர்சன சக்கரம்** ஆகும்.

சுதர்சன சக்கரம் ஒரு புறம் **16** கரங்களுடன் ஸ்ரீ சுதர்சனரும், மறுபுறம் ஆக்ரோஷமும் நிதானமும் உடைய நரசிம்ம உருவுடன் அமைந்திருக்கும். சில கோயில்களில் சுதர்சனருக்கு எனத் தனிச் சன்னதிகள் உண்டு. திருமாலின் பலன்பெற்று தீமைகள் அழிந்து நன்மைகள் பெற சுதர்சனரிடம் வேண்டிக் கொண்டோலே தீமைகள் ஒழிந்து நன்மைகள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

சென்னை மாநகரில் சில திருக்கோயில்களில் மட்டும் ஸ்ரீ சுதர்சனர்க்கு எனத் தனிச் சன்னதி உள்ளது. ஆனால், பெசன்ட் நகர், அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயிலில் மட்டுமே **ஸ்ரீ சுதர்சனர்** மகா பெரிய உருவத்துடன், அருளும் வகையில் காட்சி தருகிறார்.

ஸ்ரீ சுதர்சனருக்கு ஆனி மாதம் சித்திரை நட்சத்திரம் அவதாரத் திருநாளாகும். இவ்வாண்டு **ஜீலை மாதம் 02–07–2017ஞாயிற்றுக்கிழமை** அன்று நடைபெறுகிறது. **ஸ்ரீ சுதர்சன ஜெயந்தி** சிறப்பு தினத்தன்று சிறப்பு அபிஷேகம், அலங்காரம் ஆகியவை இத்திருக்கோயிலில் நடைபெற உள்ளது.

**எஸ். மதனகோபால், எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**செயல் அலுவலர்**

**மு. ஜோதி லட்சுமி, எம்.ஏ., பி.எல்.,**
**தக்கார் / உதவி ஆணையர்**